# பாடம் 9: ஆபிரகாம்
# (ஓர் இனத்துடனான உடன்படிக்கை 1)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 8 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 13 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், பாவத்தில் இருந்து மனந்திரும்ப மறுத்த மக்கள் அனைவரையும் வெள்ளம் அழித்த நோவாவின் கதை தொகையை நாம் கற்றோம். ஆனால் நோவாவையும் அவரது குடும்பத்தையும் காப்பாற்றிய கடவுள், மனிதகுலத்துடனான தமது உடன்படிக்கையைப் புதுப்பித்தார். வாய்ப்புக்கேடாக, நேவாவின் பேரப்பிள்ளைகளின் காலத்தில் மனிதகுலம் மீண்டும் கிளர்ச்சி செய்வதாக மாறியது. இந்த பாடத்தில், ஆபிரகாம் என்று அழைக்கப்பட்ட மனிதர் வழியாக மனிதகுலத்துடனான தமது உடன்படிக்கையை கடவுள் இன்னும் எப்படி விரிவாக்கினார் என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. தொடக்க நூல் 12:1-8,13:16-18 பகுதியை வாசித்து ஆபிரகாமுக்கு கடவுள் அளித்த வாக்குறுதியைக் குறித்து மாணவர்களுக்கு விளக்கவும். ஆபிரகாமுடனான அவரது உடன்படிக்கையில், கடவுள் ஆபிரகாமின் வழித்தோன்றல்களுக்கு ஆசி வழங்கி அவர்களை தமது சொந்த மக்களாக ஆக்குவதாக வாக்களித்தார். அதற்கு பதிலாக, ஆபிரகாம் தொடர்ந்து கடவுளுக்கு நம்பகமாக இருக்க வேண்டும், அதனால் எஞ்சிய மனித இனத்துக்கு கடவுளது ஆசிகளின் வாய்க்காலாக அவர் இருக்க முடியும். கடவுள் பிற்காலத்தில் அதே உடன்படிக்கையை ஆபிரகாமின் மகன் ஈசாக்குடனும் (தொடக்க நூல் 21:12; 26:3-4), பிறகு தொடர்ந்து ஈசாக்கின் மகன் யாக்கோபுடனும் (தொடக்க நூல் 28:14-15) மறுவுறுதி செய்தார்.

இந்த உடன்படிக்கையின் ஓர் அடையாளமாக, ஆபிரகாம் தமது முன்தோலின் சதையை நுனிநீக்கம் (விருத்தசேதனம்) செய்யுமாறு கடவுள் கோரினார். நுனிநீக்கத்திற்கான இந்த கோரிக்கை அவரது வழித்தோன்றல்கள் அனைவருக்கும் அவரது அடிமைகளுக்கும் பொருந்தும். புதிதாகப் பிறக்கும் ஆண் மகவுகள் எட்டாம் நாளில் நுனிநீக்கம் செய்யப்பட வேண்டும். கடவுளுக்கும் ஆபிரகாமுக்கும் (மேலும் அவரது வழித்தோன்றல்களுக்கும்) இடையிலான உடன்படிக்கை நிரந்தரமானது என்பதன் ஓர் அடையாளமாக நுனிநீக்கம் இருந்தது. (தொடக்க நூல் 17:10-13)

2. ஆபிரகாமின் குடும்பம் தொடக்கத்தில் கல்தேயரின் ஊர் (பண்டையத் தென் பாபிலோனியா) என்ற இடத்தைச் சார்ந்ததாக இருந்தது (தொடக்க நூல் 11:31), அவர்கள் பண்டைய உலகின் வணிக வழித்தடங்கள் வழியே பல நூறு மைல்கள் வடமேற்கில் நகர்ந்தனர். இறுதியாக, அவர்கள் அக்காலத்தில் வளர்ந்து கொண்டிருந்த வணிக மையமான காரானில் வாழ்ந்தனர்.

3. 75 வயதில், ஆபிரகாம் காரானில் இருந்து வெளியேறி கடவுள் அவருக்கு காட்டும் ஓர் அறியாத நாட்டுக்கு செல்லுமாறு கடவுளால் அழைக்கப்பட்டார். ஆபிரகாமையும் அவரது வழித்தோன்றல்களையும் ஒரு பெரிய இனமாக ஆக்குவதாக கடவுள் வாக்களித்தார் (தொடக்க நூல் 12:1-3). உண்மையில், தொடக்க நூலில் பல தடவை, ஆபிரகாமுக்கு ஒரு வாரிசை கடவுள் வாக்களித்தார். அவர் ஒரு மகனைப் பெறுவார், அந்த மகன் கடற்கரை மணலை விடவும் எண்ணிக்கையில் அதிகமான வழித்தோன்றல்களைக் கொண்டிருப்பார் என அவருக்கு சொல்லப்பட்டது. ஆபிரகாமும் அவரது மனைவி சாராவும் குழந்தையின்றி இருந்ததால், இந்த வாக்குறுதி சாத்தியமற்றதாகத் தெரிந்தது, ஏனெனில் சாரா மலடியாக இருந்தார் (தொடக்க நூல் 11:30-31; 17:15). ஆனால் ஆபிரகாம் விசுவாசத்துடன் கடவுளுக்கு கீழ்ப்படிந்தார்.

4. ஆபிரகாம் தம் மனைவி மற்றும் தமது மருமகன் லோத்தை அழைத்துக்கொண்டு, காரானில் இருந்த வணிக வழித்தடங்கள் வழியே தெற்கில் நகர்ந்து, செக்கேம் மற்றும் பெத்தேல் வழியாக மூர்க்கமான குடியிருப்போர் நிறைந்திருந்த கானான் நாட்டுக்குச் சென்றார். இந்தச் சூழ்நிலைகள் கடினமாக இருந்தன, ஆனால் கடவுளின் வாக்குறுதிகளில் ஆபிரகாம் விசுவாசம் கொண்டிருந்தார்.

5. கானானில் வாழத் தொடங்கி பத்து ஆண்டுகள் கழித்து, ஆபிரகாமும் சாராவும் இறுதியாக தங்கள் வழித்தோன்றல்களில் நிறுவப்படும் ஓர் இனத்தின் வாக்குறுதி குறித்து கலக்கம் அடைந்தனர். அவர்கள் கடவுளின் காலத்தை தங்கள் சொந்தக் கரங்களில் எடுத்துக்கொள்ள முடிவெடுத்தனர், தங்களுக்கு ஒரு குழந்தையைப் பெறுவதற்காக, சாரா தமது எகிப்திய அடிமையான ஆகாரை, ஆபிரகாமுடன் படுக்க ஏற்பாடு செய்தார். இறுதியாக ஆகார் கருவுற்று இஸ்மயேலைப் பெற்றெடுத்தார். அந்நேரத்தில், ஆபிரகாமுக்கு வயது 86.

6. அதற்கு 14 ஆண்டுகளுக்குப் பிறகே, இறுதியாக சாரா தமது முதிர்ந்த (மற்றும் மலடான) வயதில் ஒரு மகனைப் பெற்றெடுத்தார், அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடப்பட்டது. சாரா கருவுறுவதற்கு முன்னதாகவே, கடவுள் ஆபிரகாமிடம் சாரா வழியாக அவருக்கு ஒரு மகனைத் தரப்போவதாகக் கூறினார். அவர் கருத்தாங்குவதற்கு சிறிது முன்பு கூட, ஆபிரகாம் மூன்று மனிதர்களால் சந்திக்கப்பட்டார், அவர்கள் திரும்பிச் செல்லும்போது அவரிடம் வரும் ஆண்டில் சாராவுக்கு ஒரு மகனைக் கொண்டிருப்பார் என்று கூறினர். ஈசாக்கு பிறந்த அந்நேரத்தில் ஆபிரகாம் 100 வயது ஆனவராக இருந்தார்.

7. நமது வாழ்வில் நிகழ்கின்ற அனைத்துக்கும் கடவுள் ஒரு நிறைவான நேரத்தைக் கொண்டுள்ளார். அவரது திட்டம் எப்போது நடக்கும் என்று நாம் அறியாது இருந்தாலும், நம்மால் அவரை நம்ப இயல வேண்டும். பொறுமையாகக் காத்திருப்பதே கடவுளில் நம்பிக்கை வைத்திருப்பதன் அடையாளமாகும்.

8. இஸ்மயேலுக்கு 14 வயதாக இருந்த பொழுது, அவன் குழந்தை ஈசாக்கை கேலி செய்ததை சாரா பார்த்தார். பதற்றம் எழுந்தது, ஏனெனில் ஈசாக்கின் சொத்துரிமையில் இஸ்மயேல் பங்கு கொள்வதை தான் விரும்பவில்லை என்பதை சாரா உய்த்துணர்ந்தார். அவர் ஆகாரையும் இஸ்மயேலையும் வெளியே அனுப்பிட ஆபிரகாமைக் கட்டாயப்படுத்தினார். இஸ்மயேல் வாக்களிக்கப்பட்ட மகன் இல்லை என்றாலும், ஆபிரகாம் அவனை இன்னும் அன்பு செய்தார், மேலும் கடவுளும் அவனுக்கு ஆசி வழங்குவதாக வாக்களித்தார் (தொடக்க நூல் 21:12-13). இஸ்மயேல் வளர்ந்து, பாரான் பாலைநிலத்தில் வாழ்ந்தான், ஒரு புகழ்பெற்ற வில்லாளன் ஆனான், ஒரு எகிப்தியப் பெண்ணை மணந்து, 12 மகன்களையும் ஒரு மகளையும் கொண்டிருந்தான்.

9. தொடக்க நூல் 12:1-18ஐ வாசித்து அந்த கதையை மாணவர்களுக்கு விளக்கவும். ஈசாக்கு ஒரு சிறுவனாக வளர்ந்த பொழுது, ஆபிரகாம் தமது மகனை ஒரு மலைமீது கொண்டு சென்று தமக்கு எரிபலியாகச் செலுத்துமாறு கூறி கடவுள் அவரைச் சோதித்தார். இது ஆபிரகாமுக்கு அதிர்ச்சி அளிக்காத ஒரு சோதனையாக இருந்திருக்க சாத்தியமுண்டு, ஏனெனில் கானானிய மக்களிடம் குழந்தையைப் பலியிடும் வழக்கம் இருந்தது (இது அவர்களின் தெய்வங்களில் ஒன்றான மோலொக்குடன் தொடர்புடையது). ஆபிரகாமின் நாட்களில், பலி என்பது ஒரு மலிவான விலைக்குறி அன்று, அது வலியுள்ள ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை மக்கள் புரிந்திருந்தனர். ஆகவே, ஆபிரகாம் தமது மகனை மிகவும் அன்பு செய்திருந்தாலும், அவர் கடவுளின் திட்டத்தில் நம்பிக்கை வைத்து அவருக்கு கீழ்ப்படிந்தார்.

கடவுள் போகுமாறு கட்டளையிட்ட மலைக்கு ஆபிரகாம் மூன்று நாட்களாகப் பயணித்தார். வழியில், அவர்கள் மலையில் எரிபலி செலுத்துவதற்கான விலங்கு எங்கே என்று ஈசாக்கு கேட்டபோது, அதை கடவுளே கொடுப்பார் என்று விசுவாசத்துடன் ஆபிரகாம் பதிலளித்தார். ஆனால் ஈசாக்கை ஆபிரகாம் பலியிடுவதற்குச் சற்றுமுன், அவரை ஆண்டவரின் வானதூதர் ஒருவர் தடுத்தார், முட்புதரில் சிக்கியிருந்த ஓர் ஆட்டுக்கிடாய் ஈசாக்கின் இடத்தில் பலியாகக் கொடுக்கப்பட்டது.

10. உறுதியாக, ஆபிரகாம் ஈசாக்கைப் பலிபீடத்தில் பலியிட வேண்டும் என்று கடவுள் மெய்யாகச் சொல்லவில்லை. அவர் ஒரு முக்கிய எதிர்கால நிகழ்வின் முன்நிழலாக இதைச் செய்யுமாறு ஆபிரகாமுக்கு அறிவுறுத்தினார். ஒரு நாள் ஒரு தந்தை தமது மகனைப் பலியிடச் சென்றார். தனது பலிக்காக மரத்தைச் சுமந்து கொண்டு மலைமீது ஏறிய ஈசாக்கைப் போன்று, ஒரு மகன் ஒரு நாள் தமது சொந்த பலிக்கான மரத்தைச் சுமந்து கொண்டு பலியிடப்படும் குன்றின் சரிவில் ஏறிச் செல்வார். ஆனால் 2,000 ஆண்டுகளுக்குப் பிறகே அந்த நிகழ்வு நடைபெறும்.

11. ஆபிரகாம் ஒரு நிறைவான மனிதராக இருக்கவில்லை என்றாலும் அவர் கடவுளின் ஒரு நண்பராக இருந்தார். கடவுள் என்பவர் அன்பின் கடவுளாகவும் தமது வார்த்தைக்கு உண்மை உள்ளவராகவும் இருக்கிறார் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆபிரகாம் உண்மையில் தமது

முதிர்ந்த வயதில் இருந்தார், ஆயினும் கடவுள் அவருக்கு குழந்தைகளை வழங்கினார். இதன் காரணமாக, இஸ்மயேலையும் ஆகாரையும் வெளியேற்றும் கட்டாயத்திற்கு அவர் ஆளானாலும் இஸ்மயேல் பாதுகாப்பாக இருந்ததை விசுவாசத்தினால் அவர் அறிந்திருந்தார். அதே விதமாக, ஈசாக்கைப் பலியிடுமாறு அவர் கேட்கப்பட்ட பொழுது, ஈசாக்கு நலமாக இருப்பான் என்பதை விசுவாசத்தினால் அவர் அறிந்திருந்தார். விடயங்கள் எப்படி நடைபெறும் என்று அவர் பார்க்க முடியவில்லை எனினும், கடவுள் அனைத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பதை அவர் நம்பினார்.

12. கடவுளில் விசுவாசம் கொள்தல் என்பதன் பொருள் என்னவென்று ஆபிரகாம் நமக்கு வெளிக்காட்டுகிறார். கடவுளில் விசுவாசம் கொள்தல் என்பது உதட்டினால் வழிபடுவதை விட மேலானது. இதற்கு நமது வாழ்வில் செய்வதற்கான குறிப்பிட்ட செயல்கள் மற்றும் வாழ்வதற்கான குறிப்பிட்ட விதம் குறித்த நமக்கான கடவுளின் கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் கீழ்ப்படிவதன் வழியாக அவரது விருப்பத்துடனான நமது செயல்வழி ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. நமது மனங்களால் நம்புவதை மட்டுமன்று, கடவுள் செய்யச் சொல்வதைச் செய்வதை உள்ளடக்கியதாக விசுவாசம் இருக்கிறது.

13. ஆபிரகாம் விடயத்தில், கடவுள் அவரிடம் பல பலிகளைக் கோரினார், முடிவாக மோரியா மலை உச்சியின் மீது ஒரு எரிபலி. காயின் மற்றும் ஆபேலில் (தொடக்கப் பாவத்தோடு பிறந்த ஆதாம் - ஏவாளின் மகன்கள்) இருந்து அனைத்து தலைமுறை மக்களும் செய்தது போல, கடவுள் கேட்கும் பொழுதெல்லாம் பலி தேவையாக இருந்தது, மேலும் அந்த பலியின் இயல்புக்கான விதிகளைக் கட்டுப்படுத்துவது கடவுளுக்குரியது என்பதை அவரும் புரிந்து கொண்டார். கடவுள் பாவியை அன்று, பலியைக் கட்டுப்படுத்துகிறார்.

கடவுளுடனான நமது நட்புறவுக்கு, அவருக்காக நாம் விட்டுக்கொடுக்கத் தயாராய் இருக்க வேண்டும் என்று ஏதாவது செய்வார். ஆபிரகாமைப் போன்று, நாமும் பேச்சு நடத்தாமல் கீழ்ப்படியத் தயாராய் இருக்க வேண்டும். கடவுளின் கட்டளையைப் பெற்றதும், ‘‘மறுநாள் காலையில் சீக்கிரம் எழுந்து… தமது மகன் ஈசாக்கை’’ பலியிடுவதற்கு மோரியா மலைக்கு அழைத்துச் சென்ற ஆபிரகாமைப் போன்று, நமக்குச் சிறப்பானதையே அவர் எப்போதும் விரும்புகிறார் என்று நம்பி, நாமும் முழு இதயத்தோடு கடவுளின் கட்டளைப்படி செயல்படத் தயாராய் இருக்க வேண்டும்.